## சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# இன்று - மாவட்டத் தலைநகரங்களில் தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மக்கள் விரோத விஜய்யைக் கண்டித்து முழக்கமிடுகின்றனர்!

**சென்னை, செப்.12 -**

**சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து தி.மு.க. சார்பில் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் இன்று (12.09.2026 - சனிக்கிழமை "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்த அறிக்கை வருமாறு:-

திரையுலக மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி குடும்பத்துக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி - போலிவாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெற முடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, முதலமைச்சராகியிருக்கிறார் நடிகர் விஜய்.

**மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினாரா?**

இப்பொறுப்புக்கு வந்த பிறகு பொறுப்பை உணர்ந்து செயல்பட்டாரா? என்றால் இல்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஒரு சில வாக்குறுதிகளை அரைகுறையாகச் செய்து ஏமாற்றி வருகிறார். திராவிட மாடல் ஆட்சி மூலமாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

கொலை கொள்ளை அதிகமாகிவிட்டது. போதைப் பொருள் நடமாட்டமும் பாலியல் வன்முறையும் அதிகமாகி விட்டது. பல்வேறு குற்றச்செயல்களில் த.வெ.க. நிர்வாகிகளே சிக்கி வருகிறார்கள். அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள். 'தெரியாமல் ஓட்டுப் போட்டுவிட்டோம்' என்று மக்கள் வருந்திச் சொல்லி வருகிறார்கள். இதில் இருந்து திசை திருப்புவதற்காக தனது டயலாக் சூட்டிங் மேடையாக தமிழ்நாடு சட்டமன்றத்தை முதலமைச்சர் மாற்றி விட்டார்.

**அரசியல் உலகில் அருவெறுப்பான உரை!**

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட முதலமைச்சர் தலைவர் கலைஞரையும் இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறனையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசர நிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது. அரசியல் உலகில் இத்தகைய அருவெறுப்பான உரையை சட்டமன்றம் கண்டிருக்காது.

**காற்றில் பறக்கும் சட்டமன்றத்தின் மாண்பு!**

அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு - மரபு வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கிறது. படங்களாக அந்த அவையில் நிற்கிறவர்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்திருப்பார்கள். சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் தான் பேசுவது தவறு என்று தெரிந்தே பேசி, 'மீம்ஸ்', 'ரீல்ஸ்'ஐ வெளியிடுகிறார்கள். நேரலை மூலமாக மக்களை சென்றடைந்த பிறகு அதை ஒப்புக்கு அவைக் குறிப்பில் இருந்து நீக்கிக் கொள்கிறார்கள். இப்படியாக தந்திர மேடையாக சட்டசபையை த.வெ.க. அரசு பயன்படுத்துகிறது.

**தரமற்ற மனிதராக மாறிய முதலமைச்சர்!**

ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார். இவரது இப்பேச்சைக் கண்டிக்கும் வகையில், தி.மு.க. சார்பில் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் இன்று (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

### நிர்வாகத் திறமையற்ற முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து – இன்று

# மயிலாடுதுறையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*மயிலாடுதுறை, செப். 12 -*

*முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று (செப்.12) மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை பழைய பேருந்து நிலையம் கிட்டப்பங்காடி அருகே காலை 10.00 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்முருகன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.*



நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.

*இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சினிமா மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி குடும்பத்துக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி - போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, முதலமைச்சராகியிருக்கிறார் நடிகர் விஜய் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் திராவிட மாடல் ஆட்சி மூலமாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.*

*கொலை கொள்ளை அதிகமாகி விட்டது. போதைப் பொருள் நடமாட்டமும் பாலியல் வன்முறையும் அதிகமாகிவிட்டது. பல்வேறு குற்றச் செயல்களில் த.வெ.க. நிர்வாகிகளே சிக்கி வருகிறார்கள். அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள்.*

*'தெரியாமல் ஓட்டுப் போட்டு விட்டோம்' என்று மக்கள் வருந்திச்சொல்லி வருகிறார்கள். இதில் இருந்து திசை திருப்புவதற்காக தனது டயலாக் சூட்டிங் மேடையாக தமிழ்நாடு சட்டமன்றத்தை முதலமைச்சர் மாற்றி விட்டார். அரசியல் உலகில் அருவெறுப்பான உரையாற்றினார்*

*சட்டமன்றத்தில் நிர்வாக திறமையற்ற, சோபா மாடல் அரசின் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இன்று (12.09.2026, சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது.*

*இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர், உறுப்பினர்கள் கழக கிளை, கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

### செப்டம்பர் 12 (2022)



**1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### இதுவரை ரூ.6 கோடியே 55 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 55 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-09-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம். கதிரேசன், அ.நா. மங்கலம், அஞ்சல், காரிப்பட்டி, சேலம் மாவட்டம். | 25,000/–– |
| 2. | ரா.ராஜேந்திரன், விளந்தை, ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | ஜே. பத்மநாதன், ரங்கநாதபுரம், கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டம். | 25,000/– |
| 4. | மு.மோகன், அன்னை சத்யா நகர், ஆலாம்பாளையம் பேரூர், நாமக்கல் | 25,000/– |
| 5. | ஆர்.தங்கவேல், பையர்நாயக்கன்பட்டி அஞ்சல், அரூர், தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 6. | எம். கிருஷ்ணன், வீரன்வட்டம் கிராமம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம். | 25,000/– |
| 7. | திருமதி ஆர்.சரண்யா, நேரு நகர் கிழக்கு, விமானநிலையம் அஞ்சல், கோவை | 25,000/– |
| 8. | க.கா.சுப்பிரமணியம், கரட்டுப்பாளையம் அஞ்சல், நம்பியூர் வட்டம், ஈரோடு | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |